## கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின்(பொது) செயல்முறைகள்

**முன்னிலை : திரு.மா.வீராசாமி, B.Sc., M.B.A**

ந.க.எண்.அ1/4673/2017

நாள்: 12.02.2021

பொருள்: பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம்- கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலகு - காவல் துறையில் பணியாற்றிய போது 08.01.2000 அன்று காலஞ்சென்ற திரு.நா.மதுசூதனன் என்பவரது மகள் திருமதி.எஸ்.பிரசன்னா என்பவரது பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

படிக்கப்பட்டவை:

1. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணைகள் எண்.ந.க.அ1/4673/2017, நாள்: 09.02.2017.
2. அரசாணை (3டி) எண்:03, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பணிகள் அலகு, பணி.9(2) பிரிவு, நாள்: 08.01.2021.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

----------

**ஆணை:**

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலகில், காவல் துறையில் பணியாற்றி பணியிடையே 08.01.2000 அன்று காலஞ்சென்ற திரு.நா.மதுசூதனன் என்பவரின் மகள் திருமதி.எஸ்.பிரசன்னா என்பவருக்கு படிக்கப்பட்டவை 1 - இல் காணும் செயல்முறை ஆணைகளின் படி கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. தனியருக்கு பணிநியமனத்திற்கு முன்பே திருமணம் (02.05.2004) நடைபெற்றுள்ளது. தனியரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் வரன்முறை செய்ய ஏதுவாக கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டதில் படிக்கப்பட்டவை 2-இல் காணும் அரசாணையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58-இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15-ஐயும், மேலும், தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் (01.03.2017) பணப்பலன்கள் பெற மேற்காணும் சட்டப்பிரிவு 28(2)-

Scanned By Camera Scanner

ஐயும் தளர்வு செய்து, திருமதி.எஸ்.பிரசன்னா என்பவர் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 01.03.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் அடிப்படையில் திருமதி.எஸ்.பிரசன்னா என்பவர் கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்த நாளான 01.03.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

2) மேலும் தனியரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை குறித்து தேவையான பதிவுகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஒம்) மா.வீராசாமி,
மாவட்ட ஆட்சியருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
கன்னியாகுமரி மாவட்டம்.

/ உண்மைநகல்/ உத்தரவுப்படி /

உதவி மேலாளர் (பொது)

15.02.2021

பெறுநர்

திருமதி.எஸ்.பிரசன்னா,
த/பெ. (லேட்) திரு.நா.மதுசூதனன்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
விளவங்கோடு .

நகல் :

1. வட்டாட்சியர், விளவங்கோடு.
2. அ1 இருப்புகோப்பு.

Scanned By Camera Scanner